**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8064855

1. District : VELLORE / மாவட்டம் — PS: VIGILANCE & ANTI CORRUPTION, VELLORE / காவல்நிலையம் — Year: 2019 / ஆண்டு — FIR No.: 19/2019 / மு.த.அ. எண் — Date: 25.09.2019 / நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018. — Sections பிரிவுகள்: 7 of P.C. Act 1988 amended as P.C. (Amendment) Act 2018

   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: r/w 102 Crpc.

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் — Date to : நாள் வரை 24.09.2019 1300 to 16.15 hrs

   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24.09.19 — Time : நேரம் 13.00 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் VOLUME - II 2019 — Time : நேரம் 14.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — TAMIL TYPED COMPLAINT

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் South East Direction 40 kms

   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி Tamilnadu Civil Supplies Corporation Taluk Level Operational Godown, Melnathapakkam, Arcot Taluk, Vellore District

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. JOTHI — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் SAMPATH

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1968 — (d) Nationality : நாட்டினம் INDIAN — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் Deputy Inspector Cell Officer, Vellore — (g) Address : முகவரி Office of the District [illegible], Civil [illegible], Vellore [illegible], Vellore 9.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1. Tr. S. Anbazhagan (57/19) S/o Shanmugam Godown incharge / Assistant, TNCSC Taluk Level Operational Godown, M/s Nathapakkam, Arcot Taluk, Vellore.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   "NO DELAY"

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet Attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 25.04.2019
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் M. PRIYA, INSPECTOR OF POLICE
Rank: நிலை VIGILANCE ... No. எண் ...
CORRUPTION, VELLORE

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p.2

| எதிரி: | பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: இன்று 25.09.19-ஆம்தேதி 1400 மணிக்கு, வேலூர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் M.பிரியா ஆகிய நான் அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது, வேலூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலக துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.S.ஜோதி அவர்கள் நிலையம் ஆஜராகி, கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு: அனுப்புநர்: S.ஜோதி துணை ஆய்வுக்குழு அலுவலர், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, வேலூர். அம்மையீர், |
|---|---|
| திரு.S.அறிவழகன் (57/2019),<br>த/பெ சண்முகம்,<br>உதவியாளர்/கிடங்கு பொறுப்பாளர்,<br>தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் ஆற்காடு வட்ட செயல்முறை கிடங்கு,<br>மேல் நேத்தம்பாக்கம்,<br>ஆற்காடு தாலுக்கா,<br>வேலூர் மாவட்டம் | |

பொருள்: இருதுறை திடீர் சோதனை - வேலூர் மாவட்டம் ஆற்காடு தாலுக்கா மேல் நேத்தப்பாக்கம் கிராமத்தில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் ஆற்காடு வட்ட செயல்முறை கிடங்கில் 24.09.2019-ஆம் தேதி இருதுறை திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது -நடவடிக்கை எடுக்க வேண்டி புகார் அளித்தல் - சம்மந்தமாக.

வேலூர் மாவட்டம், ஆற்காடு தாலுக்கா, மேல்நேத்தப்பாக்கம் கிராமத்தில் திமிரியிலிருந்து கலவைக்கு செல்லும் சாலையின் வலது புறத்தில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் ஆற்காடு வட்ட செயல்முறை கிடங்கின் பொறுப்பாளராக பணிபுரியும் திரு.அறிவழகன் என்பவர் தமிழ்நாடு அரசு மலிவு விலையில் பொது மக்களுக்கு வழங்கப்படும் "அம்மா" சிமெண்ட்டை ஆன் லைனில் பதிவு செய்து, மூப்பு அடிப்படையில் தரவேண்டிய சிமெண்ட் மூட்டைகளை கள்ளச்சந்தையில் பயனாளி அல்லாதவர்களுக்கு இடைத்தரகர்கள் மூலம் அதிக விலையில் விற்பனை செய்வதாகவும், பயனாளிகளுக்கு தரும் 100 சிமெண்ட் மூட்டைகளுக்கு ரூ.1,000/- இலஞ்சமாக

இடைத்தரகர்கள் மூலமாக கையூட்டு பெறுவதாக நேற்று 24.09.2019-ஆம் தேதி பகல் சுமார் 1300 மணிக்கு எனக்கு கிடைக்க பெற்ற நம்பகமான தகவலை நான் ஊர்ஜிதம் செய்து கொண்டு, 24.09.2019 மாலை 1615 மணிக்கு என்னுடைய தலைமையில், வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களுடன் இணைந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக ஆற்காடு வட்ட செயல்முறை கிடங்கில் இருதுறை திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. திடீர் சோதனையை ஆரம்பிப்பதற்கு முன்பு மேற்படி கிடங்கின் பொறுப்பாளர் திரு.அறிவழகன், உதவியாளர் மற்றும் ஆஜரில் இருந்த அலுவலர்கள் முன்பாக சோதனைக்கு சென்ற அலுவலர்களாகிய நாங்கள் எங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு, எங்களை சுயபரிசோதனைக்கு உட்படுத்தி கொண்டும் எங்களிடம் எந்த பணமும் இருப்பில் இல்லை என்று அலுவலக ஊழியர்களுக்கு உறுதி செய்து காண்பிக்கப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது 1) திரு.S.அறிவழகன் (57/2019) த/பெ சண்முகம், உதவியாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக ஆற்காடு கிடங்கு, 2) திரு.D.துரைராஜ் (44/2019), பட்டியல் எழுத்தர், 3) திரு.C.வேல் முருகன் (41/2019) த/பெ சொக்கலிங்கம், இளநிலை உதவியாளர், 4) திரு. K.ரமேஷ் (33/2019) த/பெ குமார், Computer Operator மற்றும் 5) திரு.C.முனுசாமி (70/2019) த/பெ சின்னக்குழந்தை, எண்.2/6, பஜனை கோவில் தெரு, வேப்பூர், ஆற்காடு, வேலூர் மாவட்டம் (Retired Assistant, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம், வேலூர் மண்டல அலுவலகம்) ஆகியோர் கிடங்கு அலுவலகத்தினுள் இருந்தார்கள். பின்னர் Junior Quality Inspector-இருக்கையில் பணியில் இருக்க வேண்டியவர் இல்லாமல் இருந்தது குறித்து உதவியாளர் திரு.அறிவழகன் அவர்களிடம் விசாரிக்க, Junior Quality Inspector திரு.S.பெரியசாமி அவர்கள் இரண்டு நாட்கள் தற்செயல் விடுப்பில் சென்றுள்ளதாக தெரிவித்தார். பின்னர், Junior Quality Inspector-இருக்கையின் மேஜையில் உள்ள இரண்டு இழுவறைகளை சோதனை செய்ய, வழக்கு சம்மந்தமாக பணமோ, ஆவணமோ கிடைக்கப்பெறவில்லை. பின்னர், அந்த இருக்கைக்கு இடது புறத்தில் உள்ள திரு.அறிவழகன், உதவியாளர் / பொறுப்பாளர் அவர்களின் இருக்கை மேஜையை சோதனை செய்ய, மேஜையின் இடது இழுவறையில் பணம் கத்தையாக இருந்தது.

அதை எடுத்து எண்ணிப்பார்க்க, அதில் ரூ.4,100/- இருந்தது. பின்னர், திரு.அறிவழகன் அவர்களின் பச்சை நிற கைப்பையை சோதனை செய்ய, அதில் கத்தையாக பணம் இருந்தது. அந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்க்க, அதில் பணம் ரூ.35,000/- இருந்தது. மேற்படி இழுவறையில் இருந்த பணம் ரூ.4,100/- மற்றும் திரு.அறிவழகன் அவர்களின் பச்சை நிற கைப்பையில் இருந்த ரூ.35,000/- குறித்து, திரு.அறிவழகன் அவர்களிடம் விசாரணை செய்ய, அந்த பணம் குறித்து அவரால் தக்க முகாந்திரம் கூற இயலவில்லை. பின்னர், திரு.அறிவழகன், உதவியாளர் அவர்களின் மேஜையின் வைக்கப்பட்டிருந்த பதிவேடுகளுக்கு இடையில் பணம் இருந்தது. அதனை எடுத்து எண்ணிப்பார்க்க, அதில், ரூ.11,500/- இருந்தது. அந்த பணம் ரூ.11,500/- குறித்து திரு.அறிவழகன் அவர்களிடம் விசாரணை செய்ய, அவரால் அந்த பணத்திற்கு தக்க முகாந்திரம் கூற இயலாததால், திரு.அறிவழகன் அவர்களின் மேஜை இடது புற இழுவறையில் இருந்த பணம் ரூ.4,100/-, பச்சை நிற கைப்பையில் இருந்து ரூ.35,000/- அவரது மேஜையின் மீதிருந்த பதிவேடுகளுக்கு இடையில் இருந்த ரூ.11,500/- ஆக மொத்தம் ரூ.50,600/- வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேலும், திரு.அறிவழகன், உதவியாளர் / கிடங்கு பொறுப்பாளர் அவர்களின் இருக்கையின் மேஜையின் கீழே இருந்த Dust Bin-ஐ சோதனை செய்ய, அதில் கலவையில் உள்ள இந்தியன் வங்கி கிளையின் ஆறு இரசீதுகள் இருந்தன. அது பற்றி திரு.அறிவழகன், உதவியாளர் அவர்களிடம் விசாரணை செய்ய, அவர் நேற்று 24.09.2019-ஆம் தேதியன்று கிடங்கிற்கு வரப்பெற்ற சிமெண்ட் மூட்டைகளை வெளிசந்தையில் பயனாளிகள் அல்லாதவர்களுக்கு விற்பனை செய்த வகையில் வசூலான அரசுக்கு செலுத்த வேண்டிய தொகை ரூ.1,14,000/-ஐ ஒரு சிமெண்ட் மூட்டை ரூ.190/- வீதம் ஆறு நபர்களுக்கு தலா 100 சிமெண்ட் மூட்டைகள் வீதம் ரூ.19,000/- என கணக்கிட்டு மேற்சொன்ன ரூ.1,14,000/-ஐ கலவையில் உள்ள இந்தியன் வங்கி கிளையில் செலுத்திய ஆறு இரசீதுகள் என்று சொன்னார். அந்த இரசீதுகளுக்குரிய ஆறு நபர்களின் மனுக்கள் குறித்து கேட்க, திரு.அறிவழகன், உதவியாளர் அவர்கள் அவற்றை ஆஜர் செய்தார். அந்த மனுக்களும், Dust Bin-ல் இருந்த இரசீதுகளும் வழக்கின் நிமித்தம்

கைப்பற்றப்பட்டன. அந்த மனுக்களின் முதல் தாளின் பின்புறமும், Dust Bin-ல் இருந்து எடுக்கப்பட்ட இரசீதுகளின் பின்புறமும் நானும், காவல் ஆய்வாளர் திருமதி.பிரியா மற்றும் கிடங்கு பொறுப்பாளர் / உதவியாளர் திரு.அறிவழகன் ஆகியோர் கையொப்பம் செய்தோம். பின்னர், உதவியாளர் / கிடங்கு பொறுப்பாளர் திரு.அறிவழகன் அவர்களை சோதனை செய்ய, அவரது பேன்ட்டின் இடது புற பாக்கெட்டில் ரு.1,250/- இருந்தது. பின்னர், அலுவலகத்தின் தென்மேற்கு மூலையில் உள்ள கணினி அறையில் உட்கார்ந்திருந்த Computer Operator திரு.ரமேஷ் என்பவரை சோதனை செய்ய, அவரிடம் ரூ.400/- இருந்தது. பின்னர் திரு.அறிவழகனின் அலுவலக மேஜையின் எதிர்புறத்தில் உள்ள இருக்கையில் உட்கார்ந்திருந்த இளநிலை உதவியாளர் திரு.வேல்முருகன் என்பவரை சோதனை செய்ய, அவருடைய சட்டையின் இடது புற மேல் பாக்கெட்டில் ரூ.300/- இருந்தது. பின்னர் அந்த ஹாலில் நின்று கொண்டிருந்த திரு.கோபாலகிருஷ்ணன், பட்டியல் எழுத்தர் அவர்களை சோதனை செய்ய, அவருடைய பேன்ட்டின் பின்புற பாக்கெட்டில் வைக்கப்பட்டிருந்த மணிபர்ஸில் பணம் ரூ.1,250/- இருந்தது. பின்னர் அந்த ஹாலில் வடக்கு நோக்கியுள்ள இருக்கையில் உட்கார்ந்திருந்த நபரை விசாரிக்க, அவர் தன்னுடைய பெயர் முனிசாமி என்றும், தான் வேலூர் மண்டலம் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தில் உதவியாளராக பணிபுரிந்து கடந்த 31.05.2007-ஆம் தேதி ஓய்வு பெற்றதாகவும், கடந்த ஒன்றரை வருடகாலமாக வாரத்தில் இரண்டு நாட்கள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் ஆற்காடு வட்ட செயல்முறை கிடங்கிற்கு வந்து கிடங்கின் கணக்குகளை பார்க்கும் பணி செய்து வருவதாகவும், அதற்கு கிடங்கு பொறுப்பாளர் திரு.அறிவழகன் அவர்கள் வாரத்திற்கு ரூ.1,000/- சம்பளமாக தருவதாக சொன்னார். பின்னர், அவர் உட்கார்ந்திருந்த மேஜையை சோதனை செய்ய, அதில் வழக்கு சம்மந்தமாக பணமோ, ஆவணங்களோ கிடைக்கப்பெறவில்லை. பின்னர், மேற்படி திரு.முனிசாமி அவர்களை சோதனை செய்ய, அவரது பேன்ட்டின் வலது பக்க பாக்கெட்டில் ரூ.270/- இருந்தது. மேற்படி இருதுறை திடீர் சோதனையில், உதவியாளர் திரு.அறிவழகன், Computer Operator திரு.ரமேஷ், இளநிலை உதவியாளர் திரு.வேல்முருகன், பட்டியல் எழுத்தர் திரு.கோபாலகிருஷ்ணன்

மற்றும் ஓய்வு பெற்ற உதவியாளர் திரு.முனிசாமி ஆகியோர்களை சோதனை செய்து கைப்பற்றப்பட்ட பணம் குறித்து அவர்களை விசாரணை செய்ததில், அவர்கள் தக்க முகாந்திரம் கூறியதால் அந்த பணம் திரும்ப அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டது. பின்னர் கிடங்கின் பொறுப்பாளர் திரு.அறிவழகன் அவர்களிடம் வழக்கு சம்மந்தமான ஆவணங்களை கேட்க, அவர் 1) அலுவலக வருகை பதிவேடு, 2) ஆற்காடு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக கிடங்கின் Gate Register, 3) ஆற்காடு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக கிடங்கின் "அம்மா" சிமெண்ட் பதிவு பதிவேடுகள் (ஆற்காடு தாலுக்கா மற்றும் மேல் விஷாரம்), 4) ஆற்காடு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக கிடங்கின் "அம்மா" சிமெண்ட் Invoice cum Delivery Order இரண்டு புத்தகங்கள் (ஆற்காடு தாலுக்கா மற்றும் மேல் விஷாரம்), 5) ஆற்காடு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக கிடங்கின் Imprest Cash Book Xerox Copy 6) ஆற்காடு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக கிடங்கின் அம்மா சிமெண்ட் Gate Register, 7) 24.09.2019-ஆம் தேதியன்று ஆன் லைனில் விண்ணப்பிக்காமல் மற்றும் ஆன் லைனில் பணம் கட்டாமல் திருமதி.குமாரி க/பெ சரவணன், திருமதி.சுஜாதா க/பெ சுகுமார், திரு.ராஜேந்திரன், த/பெ மாணிக்கம், திருமதி.சாந்தி க/பெ பெருமாள் ஆகியோர்களுக்கு அம்மா சிமெண்ட் வாங்கியவர்களின் நான்கு மனுக்கள் மற்றும் 8) 24.09.2019-ஆம் தேதி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் ஆற்காடு வட்ட செயல்முறை கிடங்கிற்கு வந்த அம்மா சிமெண்ட் மூட்டைகளின் நான்கு Invoice-களின் நகல்கள் ஆகியவற்றை ஆஜர் செய்ய, அவை வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டன. கைப்பற்றப்பட்ட அனைத்து ஆவணங்களிலும் நானும், காவல் ஆய்வாளர் திருமதி.M.பிரியா மற்றும் திரு.அறிவழகன், உதவியாளர் / கிடங்கு பொறுப்பாளர் ஆகியோர் கையொப்பம் செய்தோம். மேலும், மேற்படி இருதுறை திடீர்சோதனையின்போது, கிடங்கு வளாகத்தில் இருந்த சிமெண்ட் லோடுடன் TN 73 C 6944 Ashok Leyland (Dhost)- சிறிய ரக சரக்கு வாகனத்தை சோதனை செய்ய, அதில் 100 மூட்டைகள் அம்மா சிமெண்ட் இருந்தன. அது குறித்து திரு.அறிவழகன், உதவியாளர் அவர்களிடம் விசாரணை செய்ய, அவர் அந்த 100 மூட்டைகளும்

வெளிச்சந்தையில் விற்பனை செய்யப்பட்டிருப்பதாகவும், அந்த வாகனத்தின் உரிமையாளர் திரு.நாகராஜன் (29/2019), த/பெ டில்லி, எண்.33/14, அண்ணா நகர்-2, ஆற்காடு, வேலூர் மாவட்டம் என அறிமுகம் செய்தார். பின்னர், அந்த 100 அம்மா சிமெண்ட் மூட்டைகள் கிடங்கில் இருப்பில் வைக்கும்படி கூறி, திரு.வேல்முருகன், இளநிலை உதவியாளர் அவர்களிடம் அறிவுறுத்தப்பட்டது. அந்த 100 சிமெண்ட் மூட்டைகளை கிடங்கில் வைக்கப்பட்ட பின்னர், மேற்படி வாகனம் அதன் உரிமையாளரான திரு.நாகராஜன் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. மேலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் ஆற்காடு வட்ட செயல்முறை கிடங்கின் உதவியாளர் / கிடங்கு பொறுப்பாளர் திரு.அறிவழகன் அவர்களின் மேஜை இழுவறையில் இருந்தும், அவருடைய கைப்பையில் இருந்தும், அவருடைய மேஜையின் மீது வைக்கப்பட்டிருந்த பதிவேடுகளுக்கு இடையில் இருந்தும் தக்க முகாந்திரம் கூறாத மற்றும் உரிமை கோராத தொகை மொத்தம் ரு.50,600/- கைப்பற்றப்பட்டது. அந்த திடீர் சோதனை நேற்று 24.09.2019-ஆம் தேதி இரவு 2000 மணிக்கு முடிக்கப்பட்டு அந்த செயல்முறையின் நகல் திரு.S.அறிவழகன், உதவியாளர் / கிடங்கு பொறுப்பாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக ஆற்காடு வட்ட செயல்முறை கிடங்கு, மேல் நேத்தப்பாக்கம் கிராமம், ஆற்காடு தாலுக்கா, வேலூர் மாவட்டம் அவர்களுக்கு வழங்கப்பட்டது. மேற்படி திரு.S.அறிவழகன் (57/2019), த/பெ சண்முகம், உதவியாளர் / கிடங்கு பொறுப்பாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் ஆற்காடு வட்ட செயல்முறை கிடங்கு, மேல் நேத்தம்பாக்கம், ஆற்காடு தாலுக்கா, வேலூர் மாவட்டம் என்பவர் தனது பதவியை பயன்படுத்தி தமிழ்நாடு அரசு மலிவு விலையில் பொது மக்களுக்கு வழங்கப்படும் "அம்மா" சிமெண்ட்டை ஆன லைனில் பதிவு செய்து, மூப்பு அடிப்படையில் தரவேண்டிய சிமெண்ட் மூட்டைகளை கள்ளச்சந்தையில் பயனாளி அல்லாதவர்களுக்கு இடைத்தரகர்கள் மூலம் அதிக விலையில் விற்பனை செய்ததற்காகவும், பயனாளிகளுக்கு தரும் 100 சிமெண்ட் மூட்டைகளுக்கு ரு.1,000/- இலஞ்சமாக இடைத்தரகர்கள் மூலமாக கையூட்டு பெற்றதற்காகவும், திரு.S.அறிவழகன், உதவியாளர் / கிடங்கு பொறுப்பாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் ஆற்காடு வட்ட செயல்முறை கிடங்கு, மேல்

நேத்தம்பாக்கம், ஆற்காடு தாலுக்கா, வேலூர் மாவட்டம் என்பவர் மீது ஊழல் தடுப்பு சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் திடீர் சோதனையின் போது கைப்பற்றப்பட்ட லஞ்ச பணம் ரூ.50,600/-யும் கைப்பற்றப்பட்ட பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் இருதுறை திடீர் கூட்டு தணிக்கையின் போது தயார் செய்யப்பட்ட அசல் செயல்முறை ஆகியவற்றையும் தங்களிடம் ஒப்புவிக்கிறேன். இப்படிக்கு Sd/-xxxxxxxx எஸ். ஜோதி 25/9/19.

Sir,

Received the complaint on 25.09.2019 at 1400 hrs. and registered a case in Vigilance and Anti-Corruption, Vellore Detachment Cr.No.18/2019, u/s 7 of Prevention of Corruption Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act, 2018 r/w 102 Cr.P.C on 25.09.2019 at 1400 hrs. Sd/-xxxxx M.Priya, Inspr./V&AC/VLR. 25.09.19.

பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல், வாதியின் அசல் புகார் மற்றும் இரு துறை திடீர் கூட்டு சோதனைகளின் செயல்முறை ஆகியவற்றை கனம் முதன்மை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, வேலூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பிக் கொள்ளப்பட்டது.

M. Priya
(M. PRIYA)
Ins/V&AC/VL
25.09.19
Inspector of Police
Vigilance & Anti-Corruption
Vellore - 1